RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt2224s-22259

# கவிக்கோவின் பார்வையில் இறைநிலை

ஆ. இராஜலெட்சுமி [அ, *]

[அ] தமிழ்த்துறை, தேசியக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி-620001, தமிழ்நாடு, இந்தியா

# The Divine State in the Eyes of Kaviko

A. Rajalakshmi [a, *]

[a] Department of Tamil, National College, Tiruchirappalli-620001, Tamil Nadu, India

* Corresponding Author: Rajalakshmiarumugam1981@gmail.com

Received: 27.09.2022
Revised: 10-11-2022
Accepted: 17-11-2022
Published: 01-12-2022

Check for updates

## ABSTRACT

The Tamils have divided their land into five categories according to the nature of each. In every divided territory, God has been properly created. When they created God, they very carefully divided God on the basis of the land, placing a distance between each land and uniting the people. Kaviko Abdul Rahman was a native of Madurai and served the Tamil literary world. Despite being from a Mohammedan community, he had no hatred for other religions. Our eyes widen when we see that God has created Kannapirana in such an enchanting way. He sees Paranthaman, Mohammad Nabi, and Jesus Christ equally on the same scale of balance. Godly worship and religion are very critical of, condemning, and skinning the present state of affairs in our country, as it was then and as it is today.

**Keywords:** Kaviko, Abdul Rahman, Worship, Religion

## முன்னுரை

தமிழர்கள் தங்கள் நிலப்பகுதியை ஐந்து வகையாக இயற்கையின் தன்மைக்கு ஏற்ப பிரித்திருக்கின்றனர். பிரிக்கப்பட்ட ஒவ்வொரு நிலப் பகுதியிலும் முறையாக கடவுளைப் படைத்திருக்கின்றனர். இவர்கள் கடவுளைப் படைக்கும் போதே மிகவும் எச்சரிக்கையாக நிலத்தின் அடிப்படையில் கடவுளைப் பிரித்து ஒவ்வொரு நிலத்திற்கும் இடையில் தொலை தூரத்தை வைத்து மக்களை ஒற்றுமைப்படுத்தினார்கள்.

குறிஞ்சி - முருகன், முல்லை - திருமால், மருதம் - இந்திரன், நெய்தல் - வருணன், பாலை - கொற்றவை என்று. ஒரு சிறப்பான வழிபாட்டு முறையும் மக்களை ஒற்றுமைப்படுத்தும் நிலையம் அன்று இருந்தது. இன்று வழிபடும் முறைகளும் மத நல்லிணக்கமும் நிலை குலையக் காரணம் என்ன என்பதை ஆராயும் நோக்கில் இக்கட்டுரை அமைகிறது.

கவிக்கோ அப்துல் ரகுமானின் பார்வையில் பக்தியும் வழிபாடும் எப்படி இருக்கிறது என்பதை அவரது படைப்புகளின் வழியாக நாம் காணலாம். மதங்களின் பெயரால் இறைவழிபாடு என்னும் பெயரால் இன்று ஆன்மிகம் அடைந்திருக்கும் நிலை எண்ணத்தக்கது.

படைத்தல், காத்தல், அழித்தல் என்பதை அடிப்படையாகக் கொண்டு உருவானது கடவுள் நம்பிக்கை. கடவுளை மறந்து வெறும் அர்த்தமற்ற நம்பிக்கைகளை கொண்டு ஆன்மிகம் தொழிலாகிப் (வியாபாரம்) போனதை நாம் இன்று காண்கிறோம். இறைத்தேடல் பற்றியும் இறைவனைப் பற்றியும் கவிக்கோ அப்துல்ரகுமான் தனியார் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியொன்றில் பங்கேற்ற போது,

“நமக்கு நல்லதை செய்பவனே இறைவன் நமக்கு தீமையை செய்பவன்ச் நிச்சயமாக கடவுளாக இருக்க மாட்டான். நீங்கள் ஒன்றை விரும்புவீர்கள், அதில் தீமை இருக்கும். நீங்கள் ஒன்றை வெறுப்பீர்கள் அதில் நன்மை இருக்கும். நமக்கு எது தேவையோ அதை நிச்சயமாக இறைவன் அறிவான். ஏழைக்கு உணவளிக்கும்போது, அவன் நமக்காகச் செய்யும் பிரார்த்தனையைக் கடவுளும் ஏற்பார். நாம் நமக்காக வேண்டுவதை விட பிறர் நமக்காக வேண்டுதல் வேண்டும் என்கிறார். (விஜய் தொலைக்காட்சி நீயா நானா வில் பங்கேற்றபோது)

## இந்தியாவில் மதம்

மத சகிப்புத்தன்மை இந்திய பாரம்பரியத்தோடு ஒன்றி வளர்ந்தது. இந்தியர்கள் மற்ற மதத்தினரை அடக்கியதில்லை. இந்தியவிற்குள் நுழைந்த பிற மதக்களையும் வழிபட்டனர். இந்தியர்கள் மத சகிப்புத்தன்மை கொண்டவர்கள் மட்டுமல்ல, மற்ற மதங்களையும் ஏற்றுக்கொள்பவர்கள் என்று கூறும் சுவாமி விவேகானந்தர் மேலும்,

மத அடக்கு முறையற்ற ஒரே நாடு இந்தியா தான் ஒருவனின் மத நம்பிக்கையின் அடிப்படையில் அவன் பாதிக்கப்பட்டதாக இங்கு இல்லை. கடவுள் உண்டெனக் கொள்கை உடையவர்கள் ஒரு பொருள் வாதம் உடையவர்கள், இருபொருள் வாதம் கொண்ட அனைவரும் எத்தகைய தொல்லையுமின்றி இருந்தனர் என்றும் கூறுகிறார் (Krishnamoorthi, 2017).

ஆண்டவனின் அருளுக்காகவே என்றிருந்த மதமும் சமயமும் இறைவழிபாடும் பிறரை ஏமாற்றும் தொழிலாக மாறியபின் எப்படி இருக்கிறது என்பதை கவிக்கோ,

“கல்லால் உனக்கு ஆலயம் கட்டுவதற்காக,

இவர்கள் உயிராலயங்களை ஏன் இழக்கிறார்கள் என்று, புரியவில்லை”. (Abdul Rahman, 2018)

மதங்கள் மதங்களுக்குள்ளாகவே, வேற்றுமை பாராட்டி ஆலயங்களை இடிப்பது மசூதிகளை இடிப்பது பகுத்தறிவற்ற செயல் என்பதை ஒரு கவிகனாக எடுத்துரைக்கவும் கண்டிக்கவும் செய்கிறார். சாதிச் சண்டைகளும், மதப்பூசல்களும் மலிவாகி விட்டதை எண்ணி வருந்துகிறார்.

சகோதரத்துவத்தின் வீரியத்தை மறக்கும் மனிதர்களை நினைத்து வேதனை அடைகிறார். ஒரு சாதிக்கும் மற்றொரு சாதிக்கும் சண்டை, ஒரு மதத்திற்கும் இன்னொரு மதத்திற்கும் மோதல் என்று நாடே, சீர் குலைந்து போகிறது. அன்பையும் சகோதரத்துவத்தையும் மறந்த இந்த செயலினால் எதிர்வரும் சமூகம் என்னவாகும்? இதன் விளைவுகள் எவ்வாறிருக்கும் என்பதை உணர மறப்பது ஏனோ? என்று வினாவும் தொடுப்பதாக அமைந்த கவிதை.

“ஆலய மணியின் ஓசையும்,

மசூதியின் அழைப்பொளியும்,

காற்றில் கரைந்து சங்கமிக்கும் அர்த்தம்,

இவர்களுக்கு எப்போது விளங்கும்" (Abdul Rahman, 2005a)

கடவுள் ஒருவரே தான் என்று திருமூலரின் வாக்கிற்கு வலுசேர்க்கிறார். பல வடிவங்களால் பார்க்கப்படுகிறது என்னும் உண்மையை விளக்குகிறார். அன்பே கடவுள் என்பதை மறப்பவன் இந்து அல்ல. ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தைக்காட்டு என்னும் கர்த்தரின் வார்த்தையை கேட்காதவன் கிறித்தவன் அல்ல. சகோதரத்துவத்தில் நம்பிக்கையற்றவன் நபிகள் வழி நடக்கும் இசுலாமியனும் அல்ல, என்றும் எடுத்துரயுக்கும் கவிஞனின் மாண்பு உயரியதே.

## இறைநிலை

இந்த உலகில் காணும் அனைத்தும் இறைவனால் படைக்கப்பட்டவை அவை அனைத்தும் அழகாகத் தோன்றுவதற்கு இறைத் தன்மையே காரணம் இதனை,

"அழகானவை அனைத்தும் ஆண்டவனின்

அழகிலிருந்து வருகின்றன" (Abdul Rahman, 2005b)

என்கிறது. "தீஷ் குத்" ன்னும் நூல் இறைவனின் அருளைப் பெற நான் இறைவன் மீது பக்தி செலுத்தினால் போதும் எங்கெங்கு நோக்கினும், இறைவனின் திருவுருவமே. அவனால் படைக்கப்பட்டது இப்பிரபஞ்சம் என்பதை உணர மறுப்பது ஏனோ? என்று வினாவும் எழுப்புகிறார். இதற்கு கவிக்கோ அவர்களே தரும் விளக்கமாக நாம் இதனைக் கொள்ளலாம். இறைவன் மீது முழுமையான நம்பிக்கை இல்லை. மனிதர்களிடம் இருக்கும் பேராசை, யார் பெரியவர்? எந்த மதம் பெரியது என்பதில் இருக்கின்ற கண்மூடித்தனமான நம்பிக்கை மதம் பிடித்த சில மனிதர்களால் தான் இறைவனுக்கும் இறைநம்பிக்கைக்கும் இழிநிலை ஏற்படுகிறது.

## பரம்பொருள் ஒன்றே

பலவகையாகப் பார்க்கப்படும் பரம் பொருள் ஒருவனே என்கிற எண்ணம் இறைவழிபாட்டின் தொடக்க நிலை அன்பில் வழியில் இறைவனைக் காணலாம். அன்பும் கருணையும் பரநலமும் இறைவன் என்பதை நினைக்க மறக்கின்றோம். வணங்குவதெல்லாம் கடவுள் என்ற பொதுவான நோக்கம் தோன்ற வேண்டும். இதனை பாரதியும் புதிய ஆத்திசூடியில்,

"பலவகையாகப் பரவிடும் பரம்பொருள்

ஒன்றே அதனியல் ஒளியுறும் அறிவாம் என்கிறார் (Bharathiar, 2019). இதனையே கவிக்கோவும்,

"அரன் என்றழைப்பினும்

வரன் கொடுப்பவன் நீ

அரியென் றிசைப்பினும்

சரியென் றிசைப்பாய்

கர்த்தன் என்றுரைப்பினும்

அர்த்தம் நீதான்

அல்லா எனினும் நீ

அல்லாது வேறு யார் ? " என்கிறார் (Abdul Rahman, 2005c).

## அர்த்தமற்ற பூசைகள்

இறைவன் தூணிலும் இருக்கிறான் துரும்பிலும் இருக்கின்றான். அவனின்றி ஓர் அணுவும் அசையாது. அப்படி இருக்க இறைவனுக்குத் தன பண வலிமையைக் கட்டுவதற்காக செய்யப்படும் வீணான பூசையினால் எவ்வித பயனும் உயல்லை என்பதை சித்தர்கள் முதல் கவிக்கோ வரை எடித்துச் சொல்ல தவறவில்லை. இதில் இருந்து இறைவழிபாடு என்பது சுயநலம் கடந்து பரநலத்தோடு இருப்பது என்கிற உண்மை நமக்குப் புலனாகிறது.

சாதாரண மனிதனையும் மாமனிதனாக்குவது ஆன்மிகம். வியாபாரமாகிவிட்ட இன்றைய சூழலில் இறை நம்பிக்கை வழிபாடும் மனிதனை மனித நிலை உயர் இருந்து கீழான நிலைக்கு இட்டு செல்கிறது என்கிறார். மேலும் கோயில் வழிபாடு, பூசை எனத் தங்களின் பொழுதை வீணாகக் கழிக்கும் கூட்டம் ஒரு பக்கம், மற்றொரு பக்கம் வியாபாரம், விளம்பரம் ,மேடம், ஆசிர்வாதக்கூட்டம் என மக்கள் போன்னையும்ன் பொருளையும் மட்டுமல்லாமல் உயிரையும் கொடுக்கும் (நரபலி) உயிரையும் எடுக்கும் காட்டுமிராண்டித் தனமும் நம் நாட்டில் தான் இருக்கிறது. இதனை படைப்புகளின் வழி சொல்ல விழைகிறார்.

"ரசனைக் கேற்ப

பக்தர்கள் பொருக்கி எடுக்க

தினுசு தினுசான தெய்வங்கள்

செல்லுலாயிட் தெய்வங்கள்" (Abdul Rahman, 2005d).

பக்திப் பரவசம் என்கிற நிலையில் தன்னை மறந்து ஆடும் பக்தி நிலை தன்மானத்தையும் பண்பாட்டையும் சீரழிக்கும் என்கிறார். புனிதத்தை கடைத் தெருவில் ஏலம் போடக் கூடாது என்பதை,

"தன்னை மறந்து

தன்னைத் துறந்து

சாமியாடும்

பக்தர்கள் திருக்கூட்டம்" (Abdul Rahman, 2005d).

என்றும் சுயமரியதையினை இழக்கும் எந்தச்செயலும் தெய்வத்தன்மை ஆகாது என்கிறார். இது பக்தியின் வெளிப்பாடே அல்ல, நாகரிகமற்ற செயல் என்கிறார். கடவுள் உளிருக்கையில் அவரை வெளியே சென்று தேடுதல் மூடத்தனம் என்பதைச் சிவவாக்கியாரும்,

"நல்ல கல்லை தெய்வம் என்று நாலுபுட்பம் சாத்தியே

சுற்றி வந்து மொண மொண என்று சொல்லு மந்திரம் ஏதடா?

நட்ட கல்லும் பேசுமு நாதன் உள்ள இருக்கையில்

சுட்ட சட்டி சுட்டுவான் கறிச்சுவை அறியுமோ?"

உருவமாகவும் அருவமாகவும் இருக்கும் ஆண்டவனுக்குப் புதுப்புது அரிதாரம் பூச வேண்தாம் என்பதையே வலியுறுத்துகிறது.

## அறத்தை மறந்த பக்தி

இன்றைய மனிதன் மதத்தின் பெயரைச் சொல்லிக் கொண்டு ஒருவரை ஒருவர் வெட்டி சாய்த்துக்கொள்ளும் அவல நிலை மாற வேண்டுமென்கிறார். மதத்தின் பெயரால் நடக்கும் கலவரங்களும் சண்டைகளும் உயிர்ப்பலிகளும் கண்டு இறைவனே கலங்குவான் என்பதாக அமைந்த இந்தக் கவிதையில்,

"அவதாரம் எடுக்கலாமென்றால்,

பயமாக இருக்கிறது,

இயேசுவை அனுப்பலாமென்றால்,

நிச்சயமாக கொன்று விடுவார்கள்.

தூதரை அனுப்பலாமென்றால்,

கல்லால் அடித்துத் துரத்தி விடுவார்கள்"

என்று எழுதக் கரணம் இன்று நடக்கும் மதச் சண்டையில் போலியான வழிபட்டால் கடவுளே கூட பூமிக்கு வர அஞ்சுவார் என்னும் நிலையை நம் மத விரோதிகள் உண்டாக்கியுள்ளனர், என்கிறார். மதங்களின் மத்தியில் பூசல்கள் ஏனோ? இதை இறைவனும் விரும்பமாட்டான் என்பதை,

"கடவுள்

பிரபஞ்சத்தைப் பார்த்தார்

அது அவர் படைத்தபடி அப்படியே இருந்தது

மனிதனைத் தவிர

அவன் மட்டும் ஏன்

இப்படித் தறி கெட்டு ஓடிக்கொண்டிருக்கிறான்?

எல்லா வற்றிலும்

தீ வைத்துக் கொண்டு

எல்லாப் பக்கங்களிலும்

விஷம் கக்கிக்கொண்டு?" (Abdul Rahman, 2005d)

இறைவனால் படைக்கப்பட்ட மனிதனே மதத்தை உண்டாக்கி பிளவுகளை ஏற்படுத்துகிறான். சிவனும் ஏசுவும் அல்லாவும் சிநேகிதர்களாக இருக்க அவர்களின் பிள்ளைகள் இப்படி சீர் கெட்டு நடக்கலாமா ? என்று, கேள்வியும் கேட்கிறார்.

## இறைவன் நம்புவது

இறைவனின் விருப்பம் தன்னால் படைக்கப்பட்ட உயிர்கள் ஒற்றுமையுடன் சகோதரத்துவத்துடன் சிறப்பான வாழ்வினைப் பெற வேண்டும் என்பதாகத் தான் இருக்க முடியும். உயர்ந்தவன் இறைவன் எனில் அவனது எண்ணமும் உயர்வாகத்தானே இருக்கும். இதில் சந்தேகமில்லை.

உனக்கான இடத்தை உனக்கான தேவையை உனக்கான வாழ்வை நீ உயர்வாக ஏற்படுத்திக்கொள், உன்னை படைத்த இறைவன் அவனுக்கு வேண்டியதை அவனே உண்டாக்கி கொள்வான். இப்போது மதம் மனநோயாளிகளின் இருப்பிடமாக இருப்பதை கண்டு கடவுளும் வருந்துவார். தன் படைப்பில் உயர்வானது என்று எண்ணிய மானிடப் பிறவி இன்றும் கீழான நிலையில் இருக்கின்றதே என்று மாயையில் உறங்கிக்கொண்டு இருக்கும் மதம் பிடித்த மனிதர்களை,

“ஆன்மாக்களுக்கு மாயை, அஞ்ஞனம்

அகங்காரம் என்று பல வகையான உறக்கங்கள்.

உறக்கத்தில் ஆழ்ந்திருக்கும் ஆன்மாக்களை

யார் எழுப்ப முடியும் ?

இறைவன் தான் எழுப்புகிறான்.

இறைவனால் தான் எழுப்ப முடியும். ஏனென்றால்

அவன் தான் உறங்காதவன்.” (Abdul Rahman, 2005e)

## மதம் கடந்த இறைப்பணி

இந்துவும் முகமதியரும் கிறித்தவரும் உடன்பிறவா சகோதரர்களைப் போல வாழ்ந்த காலமும் உண்டு. அவர்கள் சகோதரத்துவத்தை நிலை நிறுத்தினர். அதற்குக் காரணம் அவர்களிடம் இருந்த கடவுளை பற்றிய சரியான புரிதல். ஆனால் அது இன்று இல்லையே என்பது தான் கவிஞரின் கவலை. 18 ம் நூற்றாண்டில் குற்றால நாதருக்கும், நெல்லை காந்திமதி அம்மனுக்கும் திருவிழாக்கொண்டாட முஸ்லிம்கள் பணம் திரட்டித் தந்துள்ளனர்.

மதுரை காஸி முஹல்லாவில் உள்ள பள்ளிவாசலக் கட்டித் தந்தவர் சுந்தர பாண்டியன். மதுரை கோரிப்பாளையம் பள்ளி வாசலுக்கு கூன்பாண்டியன் பதினான்காயிரம் பொற்காசுகள் கொடுத்தான். தில்லையில் இசுலாமிய ஆட்சி நடந்த போது அரசு நாணயங்களில் இராமர், சீதை, இலட்சுமி உருவங்கள் பொறிக்கப்பட்டன. என்கிற செய்தி நம் நாட்டின் நம் மதங்களின் பெருமையினை

பறைசாற்றும், ஒற்றுமையினை நிலை நாட்டின. இறைவனுக்கு அழகிய பல ஆயிரம் திருப்பெயர்கள் உண்டு என்றாலும் இறைவன் ஒருவனே என்று எண்ணினர். "இறைவன் ஒருவனே" நாம் தான் அவனைப் பலவாறாகக் கற்பிக்கிறோம். (ஏகம்,ஸத்,விப்ரா,பகுதா, வதந்த) என்கிறது, ரிக் வேதம். (Abdul Rahman, 2005e).

## யார் பக்தன் எது பக்தி

எல்லா மதமும் விரும்புவது ஒற்றுமை பாராட்டுகிற வழிபாடு தான். சக மனிதனை நேசிப்பவன் இறைவனால் நேசிக்கப்படுவான். இறைவன் நீக்கமற நிறைந்திருக்கிறான். ஒரு மதத்திற்கும் மற்றொரு மதத்திற்கும் இடையில் வழிபாடு தான் வேறுபடுகிறதே தவிர இறைவன் வேறுபடுவதில்லை என்தை உண்மை பக்தன் அறிய வேண்டும்.

உண்மையான கடவுள் பக்தன் என்றால், அவன் கையில் பூக்கள் இருக்க வேண்டும், ஜெபமாலை இருக்க வேண்டும். ஆனால் இன்று பூக்கள் இருக்க வேண்டிய கைகளில் கடப்பாரை ஜெபமாலை இருக்க வேண்டிய கைகளில் வெடிகுண்டு இறைவன் ஒருவன் தான் என்ற அடிப்படை கடப்பரைகளும் வெடிகுண்டுகளும் தகர்ப்பது ஆலயங்களை அல்ல இந்த நாட்டின் மானத்தை பண்பாட்டை (Abdul Rahman, 2005e).

## முடிவுரை

அவனின்றி ஓரணுவும் அசையாது இதில் அவன் என்பது இங்கே இந்தப் பிரபஞ்சத்தைப் படைத்து அதை ஒழுங்கில் இயக்கிக் கொண்டிருக்கும் ஒரு மகா சக்தியே என்பது கவிக்கோவின் தெளிந்த ஞானம். இறைவனை இறைவனாக நினைத்து வழிபட்டால் போதும் என்பது அவரது எண்ணமாகத் திகழ்கிறது. காலம் காலமாக இறைவன் இருக்கிறானா? இல்லையா ? என்ற வினாவும் தொடர்ந்து இருந்து கொண்டே தான் வருகிறது. இறைவனை அறிய வேண்டும் என்கிற ஆவலே இறைவன் இருப்பதற்கானச் சான்று. இல்லாத ஒன்றை யாரும் தேடுவதில்லை.

## References

Abdul Rahman, (2005a) Aalabanai, National Publisher, Chennai, India

Abdul Rahman, (2005b) Nilavilirunthu Vanthavan, National Publisher, Chennai, India

Abdul Rahman, (2005c) Neeyar Virupam, National Publisher, Chennai, India

Abdul Rahman, (2005d) Suttu Viral, National Publisher, Chennai, India

Abdul Rahman, (2005e) Kadavulin Mugavari, National Publisher, Chennai, India

Abdul Rahman, (2018) Paravayin Pathai, National Publisher, Chennai, India

Bharathiar, (2019) Bharathiar Kavithaikal, Vardhaman Pathippagam, Chennai, India

Krishnamoorthi, N. (2017) Swami Vivekananda Hero For Indian Youth, Vivekanand kendra prakashan trust, Chennai, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License